

# அறிக்கை

## கனடிய
## மனித உரிமைத்
## தூதுக்குழுவின்
## இலங்கை விஜயம்

1992 ஜனவரி மாதம்

# பின்னணி

இலங்கையில் சமாதானத்தையும் நீதியையும் ஊக்குவிப்பதற்காக உலகம் தழுவிய ரீதியில் எடுக்கப்படும் முயற்சியின் ஒரு பகுதியே கனடிய மனித உரிமைத் தூதுக்குழுவின் விஜயமாகும். 1990ம் ஆண்டு ஐரோப்பிய பாராளுமன்ற அங்கத்தவர்கள், உலகத் திருச்சபைப் பேரவையின் பிரதிநிதிகள் விஜயத்தையும், 1991ம் ஆண்டு சர்வதேச மன்னிப்புச்சபை, ஐ.நா அமைப்பின் காணாமல் போனவர்களுக்கான செயற்குழுவினதும் விஜயம் ஆகியவற்றைத் தொடர்ந்தே கனடிய தூதுக்குழுவின் விஜயமும் இடம் பெறுகிறது.

## நோக்கங்கள்

- மோதல்கள் வளர்வதற்கும் மனித உரிமை அத்துமீறல்கள் இடம் பெறுவதற்கான காரணிகளை விளங்கிக்கொள்வதும் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் உட்பட அகதிகள் குறித்து பரிசீலனை செய்வதற்கும் இலங்கையின் தொடர்ச்சியான விருத்தி பற்றி கரிசனை கொள்வதற்குமான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தல்;

- இலங்கையில் சமாதானத்துக்கும் நீதிக்குமாக பணிபுரிபவர்களுக்கு கனடியர்களின் ஆதரவையும் அது தொடர்பான அக்கறையையும் தெரிவிப்பது;

- இலங்கையின் தற்போதைய பிரச்சனையின் சிக்கலான நிலைமைகள் குறித்து கனடாவில் விழிப்புணர்வை ஊக்குவிப்பது;

- இலங்கையின் பொருளாதார, மனித வள அபிவிருத்திக்கு கனடாவின் அரச சார்பற்ற அமைப்புகளும் கனடிய அரசாங்கமும் ஆக்கபூர்வமாக வகிக்கக் கூடிய பங்குபற்றி விதப்புரைகள் வழங்குவதும் ஆகும்.

# கனடிய மனித உரிமைத்தூதுக்குழுவின் அங்கத்தவர்கள்

*அதி வண.லொயிஸ் வில்சன்:* கனடா ஐக்கிய திருச்சபையின் முன்னாள் தலைவியும் உலகத் திருச்சபைப் பேரவையின் சமீபத்திய முன்னாள் தலைவியும் ஆவார்.

*மரியன் பொட்ஸ்போர்ட் பிரேஸர்:* பத்திரிகையாளர், சர்வதேச எழுத்தாளர் அமைப்பின் கனடிய நிலையத்தின் இயக்குனர் சபை உறுப்பினர்

*பிய டூக்கே:* குடிவரவு சட்டத்தரணி, கனடிய சட்டத்தரணிகள் அமைப்பின் அகதிகள் பிரிவு கியுபெக் பிராந்திய முன்னாள் தலைவர்.

*பெரில் கஃப்னி:* லிபரல் கட்சி பாராளுமன்ற உறுப்பினர், ஒன்ராறியோ மாகாண நேப்பியான் தேர்தல் தொகுதி பிரதிநிதி.

*கலாநிதி கென்னத் கூன்:* கனடா லூத்தரன் திருச்சபையின் 'தேவாலயமும் சமூகமும்' என்னும் பிரிவின் நிறைவேற்றுப் பணிப்பாளர். கனடா திருச்சபைகளின் பேரவையின் 'நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழுவின்' தலைவர்.

*பீற்றர் மக்ராத்:*கன்சர்வேட்டிவ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர். நோவா ஸ்கோஷியா மாகாணத்தின் சவுத் ஷோர் பிரதிநிதி.

*ஸ்வென்ட் றொபின்சன்:* புதிய ஜனநாயக கட்சி பாராளுமன்ற உறுப்பினர். பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் பேர்ணபி/கிங்ஸ்வே தொகுதிப் பிரதிநிதி.

*கலாநிதி ஸ்ரீபன் ரூப்:* மக்கில் பல்கலைக்கழக சட்டவியல் துறை ஆராய்ச்சிப் பகுதி துணைப் பீடாதிபதி.

*றொபின் கிப்சன்:* தூதுக்குழுவின் அலுவலர். கனடா அங்கிளிக்கன் திருச்சபையின் உலகநிவாரணத்துக்கும் அபிவிருத்திக்குமான பேராயர் நிதியத்தின் ஆசியா/பசிபிக் இணைப்பாளர்

# அறிமுகம்

இலங்கையின் வியத்தகு வனப்பும் மிகப் பெரும் செயலூக்கம் கொண்ட மனித வளமும் எடுத்துக்காட்டும் ஆழந்த துயரங்களில் இருந்து இலங்கை முழுவதையும் அச்சுறுத்தும் இனப்பிரச்சனையின் தன்மையை விளங்கிக் கொள்ள முடிகிறது. இலங்கையில் இடம் பெறும் பாரிய மனித உரிமை அத்துமீறல்களையும் இனப்பிரச்சனையால் ஏற்படுத்தப்பட்ட மனித அழிவுகளையும் குறித்து இலங்கை சென்ற மனித உரிமைத் தூதுக்குழு உறுப்பினர் அச்சமடைந்துள்ளனர். அத்துடன் நிலைமைகளின் பாரதூரத் தன்மை குறித்து சர்வதேச சமூகம் சிறிதளவே விளங்கியுள்ளதும் அல்லது சிறிதளவே நடவடிக்கை எடுத்துள்ளது என்பதும் தூதுக்குழுவிற்கு வேதனை ஏற்படுத்தியது.

1992 ஜனவரி 22ம் திகதி தொடக்கம் 29ம் திகதி வரை எட்டு நாட்கள் கனடிய தூதுக்குழு இலங்கையில் தங்கியிருந்தது. இவர்கள் இலங்கையில் தங்கியிருந்த காலத்தில் உயர் அதிகாரிகள், அரசியல்தலைவர்கள், அரச சார்பற்ற தொண்டர் அமைப்புகளின் பேச்சாளர்கள், மதத்தலைவர்கள், சமூகப்பிரதிநிதிகள், பல்வேறு மனித உரிமை அமைப்புகளின் அங்கத்தவர்கள் ஆகியோரைச் சந்தித்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட இனப் பிரச்சனையுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்களுக்கு தூதுக்குழுவினர் செவிமடுத்தனர்.

தூதுக்குழுவினர் சிறு குழுக்களாக பிரிந்து வடக்கில் வவுனியா வரையும் கிழக்கில் மட்டக்களப்புக்கும் மத்திய மாவட்டத்தில் கண்டிக்கும் தெற்கில் தங்காலை, அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளுக்கும் சென்றனர். இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக வெளியிடப்படும் இவ்வறிக்கையானது இனப் பிரச்சனைக்கு நீதியானதும் நிலையானதுமான தீர்வுக்கும் இலங்கையில் சமாதானத்தையும் நீதியையும் மீள நிலைநாட்டவும் சிறிதளவாவது பங்களிக்கும் என தூதுக்குழு உறுப்பினர் நம்புகின்றனர்.

## அறிந்து கொண்டவை

### மனித உரிமை மீறல்கள்

பீதியை ஏற்படுத்தும் விதத்தில் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. சட்டத்துக்கு புறம்பான முறையில் கொல்லப்பட்டவர்கள், தன்னிச்சையான கைதுகள், தடுப்புக்காவல்கள், காணுமல் போனவர்கள் போன்றவர்களைப் பற்றி அறிந்து கொள்ள தூதுக்குழுவிடம் பலர் உதவி கேட்டு வந்தனர். இவ்வாறுன நூற்றுக்கணக்கான சம்பவங்கள் பற்றி தூதுக்குழு எழுத்து மூலமான ஆவணங்களைப் பெற்றுக் கொண்டது. நாட்டில் மனித உரிமை மீறப்படும் பாரிய தன்மை குறித்து அரசாங்கம் ஏற்றுக் கொள்ள தவறுவது தான் மிகவும் வருந்தத்தக்க விடயமாகும்.

அத்துடன் விடுதலைப்புலிகளின் மனித உரிமை மீறல்கள் பற்றியும் குழுவின் செவிக்கெட்டியது. கப்பம் கேட்டு ஆட்கடத்தல், முஸ்லிம்களை படுகொலை செய்ததும் பலவந்தமாக வெளியேற்றியதும், தன்னிச்சையாக தடுப்புக்காவலில் வைத்திருந்தல் என்பனவும் இம்மனித உரிமை மீறல்களில் அடங்கும்.

1989, 90 காலகட்டத்தில் அதிகளவில் இடம் பெற்றது போல் அன்றி மனித உரிமை மீறல்கள் குறைவாக இருந்தாலும் தொடர்ந்தும் இவ்வாறுன மீறல்கள் நடைபெறுவது ஏற்றுக் கொள்ள முடியாதது.

### இராணுவ இக்கட்டான நிலை

விடுதலைப்புலிகளினதும் அரச படைகளினதும் பேச்சாளர்களுடன் நடத்திய சந்திப்புகளின் போது இராணுவ ரீதியாக வெற்றி பெறுவது சாத்தியமில்லை என்பதை இரு தரப்பினரும் விளங்கிக் கொள்வது தெரிகிறது. ஆயுதம் தாங்கிய விடுதலைப்புலிகளின் நிலை கொள்ளல் வடக்கிலும் அரச படைகளின் நிலைகொள்ளல்

கிழக்கிலும் அதிகமான இராணுவ மயமாக்கலை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் முஸ்லிம் சிங்கள ஊர்காவல் படைகளும் செயற்படுகின்றன. பல தமிழர்கள் புலிகளால் தங்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு குறித்து உண்மையில் நன்றியுடையவர் களாயிருக்கிறார்கள். கிழக்கில் அரச படைகளுக்கு முஸ்லிம்கள் மத்தியில் ஆதரவு உண்டு. ஆயினும் ஆயுத மோதல்களே மனித உரிமை மீறல்களுக்கான காரணம் என நியாயம் கற்பிப்பதுடன் அதை அதிகரிக்கவும் செய்கிறது. இராணுவ இக்கட்டான நிலையிலும்கூட அரசபடைகளும் விடுதலைப் புலிகளும் தாக்குதல்களுக்கு தம்மை தயார் படுத்துகின்றன. வடக்கை மீண்டும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அரசபடைகள் முயன்றால் பெருமளவு பொதுமக்கள் அழிவு ஏற்படும் என்று பொதுவான அச்சம் நிலவுகிறது. பேச்சுவார்த்தையின் மூலமான அரசியல்தீர்வை நோக்கிய சாதகமான சூழ்நிலையை உருவாக்க சர்வதேச கண்காணிப்புடனான யுத்த நிறுத்தமானது, உடனடி நடவடிக்கையாகும்.

## பேச்சுவார்த்தை மூலமான தீர்வு

பேச்சுவார்த்தை மூலமாக இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பது ஒரு அவசரமான தேவையாகும். இவ்வாறான ஒரு நிலைக்கு சாத்தியப்பாடுகளே இல்லை என்றே இந்தக் குழுவுக்கு தோன்றுகிறது. பேச்சுவார்த்தைக்கு கொண்டு செல்லக்கூடிய வழிமுறைகளைக் கையாள்வதற்கான அரசியல் தலைமை அரச தரப்பிலோ, விடுதலைப்புலிகளிடமோ இல்லை என்றே தோன்றுகிறது. விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட விருப்பம் காண்பித்த போதிலும் முக்கிய விடயங்களில் சமரசம் செய்து கொள்ள தயாராக இல்லை. அரசாங்கம் பாராளுமன்ற தெரிவுக்குழு

மூலம் சாத்தியமான தீர்வுகளைப்பற்றி பேச முயன்றாலும் கட்சி அரசியலானது ஒரு யதார்த்தபூர்வமான தீர்வு ஒன்றை முன்வைக்க தடையாக உள்ளது.

இந்த நிலைமைகளின் கீழ் பேச்சுவார்த்தை மூலமாக பிரச்சனையை தீர்ப்பதற்கான விருப்பம் அரிதாகவே காணப்படுவதால், இலங்கையில் உள்ள பலரும் தூதுக்குழுவினரும் வெளிநாட்டு அழுத்தங்கள் மூலமே இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தைக்கு அழைக்க முடியும் என்று கருதுகிறார்கள்.

## மனித உரிமை பற்றிய பொறுப்பற்ற தன்மை

அரசாங்கம் மனித உரிமை மீறல்கள் குறித்து பல ஆணைக்குழுக்களை நியமித்தாலும் அவற்றுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களும் வளங்களும் போதியனவாக இல்லை. இதனால் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்ற அரச படையைச் சேர்ந்த எவருக்கும் எந்தவித தண்டனையும் வழங்கப்படுவது இல்லை.

அவ்வாறே விடுதலைப்புலிகளும் தங்கள் உறுப்பினர்களின் கட்டுப்பாடு பற்றியோ, மனித உரிமை மீறல்கள் பற்றியோ விசாரிப்பதற்கு எந்த வழிமுறைகளையும் உருவாக்கவில்லை.

## நம்பிக்கையின்மை, பயம், அடக்குமுறை

நாடெங்கிலும் பயமும் நம்பிக்கையீனமும் காணப்படுகிறது. இந்த நிலை வடக்கு கிழக்கில் உள்ள இராணுவ மயமாக்கலும், தொடரும் மனித உரிமை மீறலும் இதற்கு துணையாக அமைகிறது. எல்லா இனத்திலும் உள்ள அரசியல்வாதிகளாலும் தீவிரவாதிகளாலும் சிறுபான்மை இன உணர்வுகள் சூழ்ச்சித் திறனுடன்

கையாளப்படுகின்றன. தமிழ், சிங்கள, முஸ்லிம் இனங்களுக்கிடையே நம்பிக்கையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்த வேண்டியது இன்றைய அவசர தேவையாகும். எல்லா சிறுபான்மை இனங்களுக்கும் உத்தரவாதம் அளிக்க வேண்டியது மிகவும் கட்டாயமானதொன்று.

அடக்குமுறையும் இலங்கையில் இந்தப் பிரச்சனைகளை மேலும் சிக்கலாக்குகிறது. வானொலி, தொலைக்காட்சி ஆகிய தொடர்பு சாதனங்கள் அரச கட்டுப்பாட்டில் உள்ளன. பத்திரிகைகள் கணிசமான அளவு அரச தரப்பு கருத்தையோ பௌத்த மேலாதிக்க கருத்தையோ அதிகரிக்கவே பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் அரசியலில் பொதுமக்கள் பங்குபற்றுவது மிகக் குறைவாகவே காணப்படுகிறது. கருத்துச் சுதந்திரமும், மாற்று அரசியல் கருத்துக்களுக்காக ஸ்தாபனமயப்படுதலும் அரசினாலும் விடுதலைப் புலிகளாலும் மேற்கொள்ளப்படும் அடக்குமுறை நடவடிக்கைகளால் மட்டுப்படுத்தப்படுகின்றன.

## மனிதாபிமான அக்கறைகள்

இந்தப் பிரச்சனையால் தொடரும் அழிவுகள் மிகவும் மோசமானவை. வடக்கில் உணவு, மருந்து, எரிபொருள் ஆகியவற்றுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. இராணுவ நடவடிக்கை வடக்கில் அதிகரித்தால் நிலைமை இன்னும் பாரதூரமாகும். வாழ்க்கைக்கான அடிப்படைகள் வடக்கில் முற்றாகவும் கிழக்கில் பெரும் அளவிலும் அழிக்கப்பட்டுள்ளன. அன்றாட வாழ்க்கை என்பது சாத்தியமற்றது.

உத்தியோகபூர்வ தகவல்களின்படி, இலங்கையில் பதினைந்து லட்சம் மக்கள் இடம் பெயர்ந்து உள்ளனர். இதில் இரண்டரை லட்சம் பேர் வசதிகள் குறைந்ததும் நெருக்கடியானதுமான அகதிமுகாம்களில் வாழ்கிறார்கள்.

மற்ற நாடுகளுக்கான அகதிப் பெயர்வும் தொடர்கிறது. நாடெங்கிலும் தன்னிச்சையாக தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவது சாதாரணமான நிகழ்ச்சியாகும். எனவே எந்தத் தமிழ் இளைஞனும் ஒன்றில் அனேக சந்தர்ப்பங்களில் அரச படை களினுலோ அல்லது சில சந்தர்ப்பங்களில் விடுதலைப் புலிகளினுலோ தண்டிக்கப்படக் கூடும் என்ற உறுதியான அச்சத்தை எதிர்நோக்குகின்றனர் என்ற முடிவுக்கு தூதுக்குழு வருகின்றது.

## பொருளாதார ஏற்றத்தாழ்வு

இந்தப் பிரச்சனையின் மையத்தில் செல்வந்தர், ஏழைகளுக்கிடையிலான இடைவெளியும், வடக்கு கிழக்குக்கும் நாட்டின் மறுபகுதிகளுக்கும் இடையிலான இடைவெளியும் அதிகரித்து வருகின்றது. அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையினுல் ஏற்பட்ட விரக்தியே வடக்கு கிழக்கில் விடுதலைப்புலிகளுக்கும் தெற்கில் ஜே. வி.பிக்கும் ஆதரவு ஏற்படுவதற்கான அடிப்படை என்று பலர் தூதுக்குழுவிடம் சுட்டிக் காட்டினர். கடந்த வருடத்தில் இலங்கையின் ஆறுவீத பொருளாதார வளர்ச்சி, தொடர்ந்து நடைபெறும் சண்டை காரணமாக வடக்கு கிழக்கிற்கு எதுவித பயனையும் வழங்கவில்லை.

## அபிவிருத்திக்கான உதவி

அபிவிருத்திக்காக வெளிநாடுகளால் வழங்கப்படும் உதவிகள், நிவாரணத்துக்காக வழங்கப்படும் உதவிகள் தவிர வேறெந்த வடிவிலும் மக்களில் மிகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடைப்பதில்லை என்று வடக்கு கிழக்கு மக்கள் உறுதியாக தெரிவித்தார்கள். வெளிநாட்டு கடன்களை மீளச் செலுத்துவதற்கான நிபந்தனைகளும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் கட்டமைப்பில்

மாற்றத்திற்கான வேலைத்திட்டம் போன்றனவும் (Structural Adjustment Program) ஏழை செல்வந்தர் வேறுபாடு அதிகரிக்க காரணம் என்று சில ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் ஆக்கபூர்வமான வேலைகளில் ஈடுபட்டாலும் தொடரும் மோதலால் இந்த நிறுவனங்களின் செயற்பாடுகள் வட கிழக்கின் அடிப்படையான சமூக பொருளாதார நிலைமைகளைக் கூட கவனிக்கமுடியாதளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

உதவி வழங்கும் நாடுகளும் சர்வதேச நிதிநிறுவனங்களும் அபிவிருத்திக்கான நிதியுதவியை மனித உரிமைகளுடன் தொடர்புபடுத்துவதன்மூலம் அரசாங்கம் மனித உரிமை மீறல்களை நிறுத்த வழி செய்யலாம் என்றும் பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வை நோக்கி ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வழி சமைக்கும் என்றும் பலர் கருத்து தெரிவித்தனர்.

## சர்வதேச நாடுகளின் பங்கு

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் சீரடைய வேண்டி உலகநாடுகள் வகித்த பங்கும் தற்போது ஆற்றும் பணியும் முக்கியமான அழுத்தங்களை பிரயோகித்து வருவதாக குழுவுக்கு தெரிவிக்கப்பட்டது. இந்தக் குழுவின் விஜயம் சம்பந்தமாக தொடர்பு சாதனங்களும் மக்களும் ஆர்வம் காட்டியிருந்தனர். பலர் தனிப்பட்ட விடயங்களில் உதவி செய்யும்படியும், சர்வதேச நாடுகள் மூலம் மனித உரிமை மீறல்களை நிறுத்துமாறும் இனப்பிரச்சனையைத் தீர்க்க இலங்கை அரசு, விடுதலைப்புலிகள் மீதும் அழுத்தத்தைப் பிரயோகிக்கும்படி கோரியும் குழுவை நாடினர். சர்வதேசத் தூதுக்குழுக்கள் இலங்கைக்கு தொடர்ந்து விஜயம் செய்வதும் அழுத்தம் தொடர்ந்தும் பிரயோகிக்கப்படுவதும் அவசியமானது.

# பரிந்துரைகள்

## பேச்சுவார்த்தை மூலமான தீர்வு

1.இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தை மூலமாக அரசியல்தீர்வுக்கு இட்டுச்செல்கின்ற, சர்வதேச கண்காணிப்புடனான உடனடி யுத்த நிறுத்தத்திற்கு சம்மதிக்க வேண்டும். இந்த நோக்கத்தை அடைவதற்காக சர்வதேச சமூகம் அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும்.

2. எந்த சூழ்நிலையிலும், இனப்பிரச்சனையை தீர்ப்பதற்காக, இராணுவ நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளக் கூடாது. குறிப்பாக யாழ். குடாநாட்டில் நடவடிக்கைகளை ஆரம்பிக்கக் கூடாது.

3. இலங்கை அரசு இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான அரசியல்தீர்வுகளையும் தெளிவான கால அட்டவணையையும் விரைவாக முன் மொழிந்து தனது நம்பிக்கையை காட்ட வேண்டும்.

4.ஐ.நா சபை, பொதுநலவாய அமைப்பு அல்லது வேறு பொருத்தமான பல தரப்பு அமைப்புகளின் உதவியுடன் பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக்க செய்ய கனடா முன்னணிப் பங்கு வகிக்க வேண்டும்.

5. பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகாலவிதிகள் போன்ற அடக்குமுறைச் சட்டங்களை நீக்கி, சர்வதேச சட்டவிதிகளுக்கும் வழமைகளுக்கும் அமைய எல்லா சட்டங்கள் இருப்பதை இலங்கை அரசு உறுதி செய்து கொள்ள வேண்டும்.

6.கலாசாரங்களுக்கிடையிலான புரிந்துணர்வை ஏற்படுத்த மதத் தலைவர்கள் முக்கிய பங்கு வகிக்க ஊக்குவிக்கப்பட வேண்டும்.

## மனித உரிமைகள்

7.சர்வதேச மன்னிப்புச் சபையின் 'யுத்த நிலைமைகளின் கீழ் இலங்கையின் வடக்கு கிழக்கில் மனித உரிமை மீறல்கள்' என்ற அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்ட 32 பரிந்துரைகளும் அமுலாக்கப்பட வேண்டும். அத்துடன் இந்த அமுலாக்கம் சுதந்திரமாக கண்காணிக்கப்பட வேண்டும்.

## தடுத்து வைக்கப்பட்டோர்

8. இலங்கை அரசாங்கம், இலங்கையின் சகல பாகங்களிலும் தடுத்து வைக்கப்பட்டோர் அனைவர் பற்றிய விபரங்களையும் மத்தியப்படுத்தப்பட்ட அட்டவணை ஒன்றின் மூலம் பொதுமக்கள் எல்லோரும் பார்வையிடக் கூடிய விதத்தில் வைக்க வேண்டும்.

9.தடுத்து வைக்கப்பட்டோரைக் கையாளும் முறை தொடர்பாக தெளிவானதும் நியாயமானதுமான நடைமுறைகளை இலங்கை அரசாங்கம் ஏற்படுத்தி செயல்படுத்த வேண்டும். தடுத்து வைக்கப்பட்ட ஒருவர் தனது நிலை பற்றி அறிவிக்கவும், தொடர்பு கொள்ளவும், அவரது உறவினர் பார்வையிடக் கூடியதுமான உரிமைகள் இந் நடைமுறையில் உள்ளடக்கப்பட வேண்டும்.

10. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் 9வது சரத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்க ஒரு அமைச்சர் மட்டுமே அதிகாரம் வழங்கக் கூடியவராக இருக்க வேண்டும். (இந்த பரிந்துரை ஐந்தாவது பரிந்துரையில் தங்கியுள்ளது)

11.கைது செய்யப்பட்டவர்கள் முதல் 24 மணி நேரத்தினுள்ளேயே அதிக ஆபத்தை எதிநோக்க வேண்டியிருப்பதால் கைது செய்யப்பட்ட அனைவரும் மனித உரிமை அமைப்பு, செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளால் உடனடியாக பார்வையிடப்படும் வசதியை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.

12.மேற்படி 8,9,11ம் பரிந்துரைகளை விடுதலைப்புலிகளும் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அமுலாக்க வேண்டும்.

13.தடுப்புக்காவலுக்கான நிபந்தனைகள் சர்வதேசரீதியாக ஏற்படுத்தப்பட்ட தரத்துக்கு அமைந்ததாக இருக்க வேண்டும்.

## தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்ளல்

14.மனித உரிமை, சட்ட மீறல்களில் ஈடுபட்ட, ஈடுபடும் படையினர் மீது ஒழுக்காற்று நடவடிக்கையும் குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கக் கூடிய முறையில் சட்ட செயற்படுமுறையை ஏற்படுத்தி அமுல்படுத்த வேண்டும்.

15. தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக

உருவாக்கப்பட்ட சட்டத்தை (Indemnity amendment) நீக்குவதன் மூலம் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுபவர்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்பதை அரசாங்கம் காட்ட வேண்டும்.

## விசாரணை ஆணைக் குழுக்கள்

16.கொக்கட்டிச் சோலை படுகொலை பற்றிய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மீளமைக்கப்படுவதோடு சாட்சியங்களை கட்டாயப்படுத்தி விசாரிக்கவும், அவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கும் அதிகாரமும் இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கி கொக்கட்டிச் சோலை படுகொலையின் சூழ்நிலை பற்றிய சுதந்திரமான விசாரணைக்கு வழிசமைக்க வேண்டும்.

17. சர்வதேச மன்னிப்புச் சபை, ஐநா காணமல் போனவர்கள் தொடர்பான செயற்குழு ஆகியவற்றின் பரிந்துரைகளின்படி, காணமல்போனவர்கள் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையில் தை 11, 1991 க்கு முன்னர் காணமல் போனவர்களையும் உள்ளடக்க வேண்டும்.

18. மட்டக்களப்பு மாகாணத்தின் காத்தான்குடி படுகொலையும், திருகோணமலை கட்டைபறிச்சானில் இரு குடும்பங்கள் முழுமையாக அழிக்கப்பட்டது உட்பட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க சுதந்திரமான ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு அதற்கு போதுமான வளங்களும் வழங்கப்பட வேண்டும்.

## மனித உரிமை தரம்

19.தடுத்து வைக்கப்படும்போதும் கைது செய்யப்படும் போதும் இறக்கும் சகல சந்தர்ப்பங்களிலும் இறப்புச்சான்றிதழ் வழங்கப்பட்டு அவர்களுடைய உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

20. துன்புறுத்தல், குரூரமான, மனிதாபிமானமற்ற தண்டனை, சர்வதேச அரசியல் குடியியல் உரிமைகள் சாசனங்கள் ஆகிய சர்வதேச உடன்படிக்கைகளில் இலங்கை அரசு கைச்சாத்திட வேண்டும்.

21. இலங்கை அரசியலமைப்பும் சட்டங்களும் சர்வதேச அரசியல் குடியியல் சாசனம், சமூக, பொருளாதார கலாசார உரிமைகள் சாசனத்துக்கு அமைந்ததாக

இருப்பதை இலங்கை அரசு உறுதி செய்து கொள்ள வேண்டும்.

22. ஸ்தாபனமயப்பட்ட, ஸ்தாபன மயப்படாத ஆண், பெண் தொழிலாளர்களின் உரிமைகள் பற்றிய சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) சாசனத்தை இலங்கை அரசு ஏற்றுக் கொண்டு மதிக்க வேண்டும்.

23. பேச்சுச் சுதந்திரம், ஸ்தாபனமயப்படும் சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம் போன்ற அடிப்படை உரிமைகளை உறுதி செய்து கொள்ளும் விதத்தில் இலங்கை அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும்.

## அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள்

24. அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் பற்றிய ஜனாதிபதி விசாரணைக்குழுவின் விசாரணையின் முடிவுகளுக்கு மதிப்பளிக்கும் அதேவேளையில் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் அரச தலையீடு இல்லாமல் இயங்க அனுமதிக்கப்பட வேண்டும்.

## மொழி உரிமைகள்

25. சிங்கள, தமிழ் மொழிகளுக்கு சம உரிமை அங்கீகரிக்கக் கூடியவாறு அரசியலமைப்பு திருத்தப்படுவதுடன் அதை அமுலாக்க நிர்வாக நடைமுறைகளும் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

## மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா ஆணைக்குழு

26.48வது ஐ.நா மனித உரிமைகள் அமர்வின்போது இலங்கையின் மனித உரிமை நிலை பற்றி கடும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற கனடிய அரசு முன்னணி வகிக்க வேண்டும்.

## ஆயுதக் கட்டுப்பாடு

27. இலங்கைக்கான சகல ஆயுத ஏற்றுமதியும் தடை செய்யப்படுவதை கனடா உறுதி செய்து கொள்ள வேண்டும்.

28.இலங்கைக்கான ஆயுத ஏற்றுமதியை முழுமையாக நிறுத்தும்படி சர்வதேச சமூகத்தை கனடா கோர வேண்டும்.

## வெளிநாட்டு அபிவிருத்தி உதவிகள்

29.இலங்கை அரசின் கருத்திட்டங்களுக்கான கனடிய இரு தரப்பு உதவிகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டு, இவை வேறு திட்டங்களுக்கு மீள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

30. இலங்கை, கனடிய, சர்வதேச அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் மூலம் கனடா தொடர்ந்தும் நிதியுதவி செய்ய வேண்டும்.

31. உதவி வழங்கும் நாடுகளுக்கும் சர்வதேச நிதிநிறுவனங்களுக்கும் தாங்கள் வழங்கும் உதவிகளை மனித உரிமைகளுடன் தொடர்புபடுத்தும்படி கோருவதில் கனடா தலைமைப்பங்கு வகிக்க வேண்டும்.

32. எதிர்வரும் மாசி 7ம் திகதி நடைபெறும் இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளின் பாரிஸ் மாநாட்டில் அபிவிருத்தி மற்றும் நிதிஉதவிகளை, மனித உரிமை மீறல்களை சீர் செய்வதற்கான கால அட்டவணையுடன் தொடர்புபடுத்தும்படி கோருவ துடன் இலங்கையின் மனித உரிமை நிலையை உதவி வழங்கும் நாடுகள் கண்காணிப்பதற்கான வழிமுறை களையும் முன்மொழிய வேண்டும்.

33. கனடா தொடர்ந்தும் மனித உரிமை, இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை அதிகரிக்க முயலும் இலங்கை அமைப்புகளை இனம் கண்டு உதவ வேண்டும்.

34. பொது விடயங்கள் தொடர்பாக செயற்படும் கனடிய நிறுவனங்களையும் இலங்கைக்குழுக்களையும் தொடர்ந்தும் அடையாளம் கண்டு அவற்றுக்கிடையே தொடர்புகள் ஏற்படுவதை ஊக்குவிக்க வேண்டும்.

35. இலங்கைக்காக கனடாவால் வழங்கப்படும் வெளிநாட்டுக்கான அபிவிருத்தி உதவிகள், நீடிக்கக் கொள்ளக் கூடிய அபிவிருத்திகள், சுற்றுடலை பாதுகாப்பது, பொருளாதார ஏற்றத்தாழ்வை குறைப்பது போன்றவற்றுக்கு பயன்படுத்தப்படுகிறதா என்பதை கனடா உறுதி செய்ய வேண்டும்.

36. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றால் கட்டமைப்பு மாற்ற வேலைத்திட்டங்களுக்காக

வழங்கப்படும் உதவிகளின் தாக்கங்களால் ஏழைகளும் அடிமட்டத்தில் உள்ள சமூகங்களும் பாதிப்புக் குள்ளாவது குறித்து கனடா அக்கறை செலுத்த வேண்டும்.

## மனிதாபிமான அக்கறைகள்

37.வட மாகாணத்திற்கு போதிய உணவு, மருந்து, எரிபொருள் செல்வதற்கு சகல முயற்சிகளும் எடுக்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

38. கனடா, நிதி மற்றும் ஏனைய உதவிகள் வழங்கும் போது, இலங்கையின் வடக்கு கிழக்கு மக்களின் , குறிப்பாக யாழ் மாவட்ட மக்களின் மனிதாபிமான தேவைகள் போதியளவு பூர்த்தி செய்யப்படுவதற்கு முன்னுரிமை வழங்க ேண்டும்.

39. வடக்குக்கான இந்த மனிதாபிமான நிதியுதவியைக் கண்காணிக்க சர்வதேச பார்வையாளர் குழு ஒன்று அனுப்பப்பட வேண்டும்.

## அகதிகள்

40. தற்போதைய உள்நாட்டுயுத்தம் காரணமாக, கனடாவில் அகதி நிலை கோரியவர்களை பலவந்தமாக வெளியேற்றும் முயற்சியை கனடா கைவிட வேண்டும்

41.அகதிநிலை கோரிய ஒருவரின் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டபின்னர் இரண்டு மாதங்களுக்குள் அவரது துணைவரும் பிள்ளைகளும் கனடாவுக்கு அழைப்பதற்காக சகல வளங்களும் ஒதுக்கப்பட வேண்டும்.

42. இலங்கைக்குள்ளேயே இடம் பெயர்ந்து வாழ்பவர்களது குறுகிய கால, நீண்ட கால நலன்களை கனடா தொடர்ந்தும் முதன்மைப்படுத்த வேண்டும்.

43. சர்வதேச அகதிகள் சாசனத்தில் இந்தியா கையெழுத்திட வற்புறுத்துவதன் மூலம் ஐ.நா. அகதிகள் ஆணையாளர் அமைப்பு இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளுடனும் தொடர்பு கொள்ள வழிவகுக்க வேண்டும்.

# நன்றி

கனடிய மனித உரிமைக்கான தூதுக்குழுவின் இலங்கை விஜயம் பலருடைய ஒத்துழைப்பும் ஒத்தாசையும் இன்றி இடம் பெற்றிருக்க முடியாது. அவர்களுக்கு நாம் மிகவும் கடப்பாடுடையவர்களாக இருக்கிறோம்.

இலங்கையில் செயற்படும் INFORM என்ற மனித உரிமை அமைப்பு இந்த தூதுக்குழுவின் இலங்கை விஜயத்தின் கால அட்டவணையும் விபரங்களையும் தயாரிப்பதில் பெரும் பங்காற்றியது.

இலங்கை அரசின் ஒத்துழைப்பு இன்றி இந்த விஜயம் சாத்தியமாகியிருக்க முடியாது. விசேடமாக சர்வதேச விவகாரம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனுக்கும் ஏனைய அரசாங்க அதிகாரிகளுக்கும் தங்களுடைய நேரத்தை எம்மோடு பகிர்ந்து கொண்ட அரச அதிகாரிகளுக்கும் எங்கள் நன்றிகள்.

கனடிய உயர்ஸ்தானிகர் நான்சி ஸ்ரைல்ஸ் அவர்களுக்கும் கொழும்பில் உள்ள அவரது அலுவலக உத்தியோகத்தர்களது ஒத்துழைப்புக்கும் உபசாரத்துக்கும் நன்றிகள்.

எங்களுடைய கற்கையானது இலங்கையில் வாழும் பலர் எங்களைச் சந்திக்க சம்மதித்ததாலும்ம் நிலைமை தொடர்பாக தங்கள் கருத்தை வெளிப்படையாக தெரிவித்ததாலும் சாத்தியமானது. அவர்களில் ஒவ்வொருவருக்கும் நாங்கள் நன்றி தெரிவிப்பதுடன் எங்கள் உரையாடல் காரணமாக உங்களுக்கு விரைவில் சமாதானமும் நீதியும் கிடைக்கும் என நம்புகிறோம்.

கனடிய, தமிழ், சிங்களவர்களை உள்ளடக்கிய அமைப்பான Canadian Solidarity Forum For Sri Lanka தூதுக்குழுவை இலங்கைக்கு அனுப்புவதற்கான பூர்வாங்க வேலைகளைச் செய்தது.

இறுதியாக இந்த விஜயம் நிதி உதவியில்லாமல் சாத்தியமாகியிருக்காது. மனித உரிமைகளுக்கும் ஜனநாயக அபிவிருத்திக்குமான சர்வதேச நிலையம், அபிவிருத்திக்கும் சமாதானத்துக்குமான கனடிய கத்தோலிக்க அமைப்பு, கனடா ஐக்கிய திருச்சபை, அங்கிளிக்கன் திருச்சபையின் உலகநிவாரணத்துக்கும் அபிவிருத்திக்குமான பேராயர் நிதியம் ஆகியவற்றுக்கு அவர்களின் நிதியுதவிக்காக எங்கள் ஆழ்ந்த நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

*Copies of this Report are available from*

CANADIAN HUMAN RIGHTS MISSION TO SRI LANKA
ATTN: ROBIN GIBSON
C/O 600 JARVIS STREET, TORONTO, ONTARIO M4Y 2J6

TELEPHONE: 416 924 9192
FAX: 416 968 7983

*Copies of this Report are also available in Sinhala*